நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 4

தொகுதி: 114

திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்

விலை: ரூ.20

ஏப்ரல்- 2020

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர். இரா. சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் - பேராசிரியர் இரா. சதாசிவம் 4
2. சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா 8
 - முதுமுனைவர் இரா. இளங்குமரன்
3. தமிழில் திறனாய்வு மரபு
 - பேராசிரியர் ப. மருதநாயகம் 10
4. குறள் போற்றும் பொருள் நெறி
 - பேராசிரியர் கி. கருணாகரன் 30
5. சங்கச் செய்திகள் 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

குறியிறையார் பாடிய குறுந்தொகைப் பாடல் குறித்துப் பேராசிரியர் இரா. இளங்குமரனார் விளக்கம் இடம் பெறுகிறது.

இடையில் குறியை மறைக்க, குழந்தைகளுக்குக் கட்டுவது கோவணமாகும். குறிஞ்சி நிலத்தில் சிறுவர்கள் விளையாடும் பருவத்தில் ஆடை அணிகலன் இன்றி இயற்கையோடு ஒன்றி வாழும் சூழல் கவிதையின்கண் காட்சியளிக்கிறது. யானைக்கன்றும் சிறுகுழந்தைகளும் குறுக்கும் மறுக்குமாக சந்து முற்றங்களில் விளையாடும் இனிய காட்சி ஓவியமாக அமைந்து இன்பம் பயக்கிறது.

பின்னாளில் அவனேப் பெரியவனாகி காதல் நெஞ்சில் - திணைப்புனத்தில் - பிரிவுதரும் கவலை, தினைப்புனத்தில் யானைக்கன்று பெரிதாகி மேய்வது போல தலைவியின் நெஞ்சில் பிரிவுத் துன்பத்தை விளைவிக்கிறது. காதல் ஏக்கம் கனிந்து, களவு கற்பாக வேண்டுமே என்ற ஏக்கம்; தலைவி நெஞ்சம் தினைப்புனம்; யானை, காதலன். வரைவு வேண்டிய துயரமும் ஏக்கமும் இயற்கை ஓவியம். குறுந்தொகை, சங்க இலக்கியத்தில் சிறியபாடல்களின் தொகுப்பு; சிறிய பாடல்களில் கவிதை ஆற்றல்மிக்க கலைஞர் மட்டுமே சொல்லோவியம் தீட்டமுடியும். பேராசிரியர் இளங்குமரனார், பாட்டில் பழஞ்சொற்கள் மறைந்துவரும் செய்திகளைக் குறிப்பிடுகையில் ‘காலம் சிலவற்றை மறக்கடிக்கிறது’ என்பதை உணரமுடிகின்றது. அவை பயன்பாட்டில் இல்லாவிட்டால் மறந்தேபோகும்.

தமிழில் திறனாய்வு மரபு என்னும் பொருளில் பேராசிரியர் ப.மருதநாயகம் கட்டுரை இடம் பெறுகிறது,

'திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என பாரதி குறிப்பிடுவார். பேராசிரியர் ப.மருதநாயகம் வெளிநாட்டுத் திறனாய்வாளர்கள் அண்மைக் காலத்தில் திறனாய்வு குறித்து வெளியிட்டுள்ள கருத்துகளை ஆய்ந்து அதனைத் தமிழ் இலக்கிய, இலக்கண உரையாசிரியர்களான பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார், பரிமேலழகர் போன்றவர்கள் செவ்விலக்கியங்களை ஆய்ந்து தெளிந்து உரையும் குறிப்புமாக எழுதிய செய்திகள் காலத்தைவென்று இன்றைய மேலை நாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் கருத்துகளுக்கு அரண் செய்வதைப் பேராசிரியர் எடுத்துரைக்கும் நுட்பம், தமிழ் இலக்கியத்தை மறுவாசிப்புச் செய்த பெருமக்கள் மீண்டும் சிந்திக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

இலக்கியத்தின் பயனாகிய முருகியல் இன்பம் அறியாதும் மக்கள் பயன்பாட்டு நலத்தைக் கருத்தில் கொள்ளாதும் தம் கொள்கைக்கு ஏற்ப குற்றம் கூறும் மனநிலையில் இலக்கியத்தைச் தற்சார்புடன் பார்த்தமுயற்சி வீண் என்பதும் உணர்தற்பாலது. இலக்கியத்தை இலக்கியமாகப் பார்த்தலும் சொல்லாடற் கலையாகப் பார்த்தலும் மொழிமுதல் படைப்பாகப் பார்த்தலும் மட்டுமன்றி நூலில் குறைகாணும் நிலையும் தமிழில் தலைதூக்கியது.

மேலைநாட்டு அறிஞர், "உன்னால் ஒரு நூலில் நிறையேதும் காணமுடியவில்லையென்றால் அதனைத் திறனாய்வு செய்யாதே; நிறைகாண முடிந்தவர்களுக்கு விட்டுவிடு" என்று குறிப்பிடும் செய்தி ஆய்வாளர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறையாகும். அந்த அடிப்படையில் சிலப்பதிகாரத்தை ஆய்ந்து உரைகண்ட அரும்பத

உரையாசிரியரும், அடியார்க்குநல்லாரும் மூலநூலின் முருகியலை, கற்பவர் உள்ளம் கொள்ளும் வழி இளங்கோவின் உள்ள உணர்வையும் சொற்கட்டமைப்பில் உள்ள நடை அழகையும் கற்பவர் மனம் கொள்ளும் வகையில் உரைநயம் காட்டியிருப்பது குறித்துப் பேராசிரியர் ப.மருதநாயகம் தரும் விளக்கம் பலமுறை கற்று இன்பம் பெறத்தக்கது.

நச்சினார்க்கினியர், குறிஞ்சிப்பாட்டுக்கு எழுதிய உரைச்சிறப்பு, இலக்கியம் கற்பவருக்கு நவில்தொறும் இன்பம் தருவதாகும். ஆசிரியர் அடியார்க்கு நல்லாரும் நச்சினார்க்கினியரும் ஆய்ந்து காட்டிய மூலநூலை அனுபவிப்பதற்குரிய அரிய கையேடாகக் கட்டுரை அமைந்துள்ளதால் அதனை முழுவதுமாக ஒரே இதழில் - செந்தமிழில் - வெளியிட்டுள்ளோம்.

குறள் போற்றும் பொருள்நெறி என்னும் பொருளில் பேராசிரியர் கி.கருணாகரன் கட்டுரை இடம்பெறுகிறது. பொருளதிகாரத்தின் அரசியல், பொருளியல், மேலாண்மை குறித்துத் தாமும் ஆய்வு மாணவர்களும் இதுவரை நடத்திய ஆய்வைக் குறிப்பிட்டு, மேற்கொண்டு எடுத்துச் செல்ல வேண்டிய ஆளுமைகள் குறித்து வாசகர்களைச் சிந்திக்க வைத்துள்ளார்.

இந்திய அரசியல், பொருளாதாரச் சூழல் திருக்குறள் நெறிநின்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்(381)' எனும் ஆறு அங்கங்களைக் குறித்தும் அவற்றை ஆளுகின்ற அரசு குறித்தும் ஆய்வுமேற்கொண்டு அவற்றின் மேலாண்மையும்

விரிவாகச் சிந்திக்கப்பட்டுள்ளது. இவை குறித்த கட்டமைப்பு நாள்தோறும் மாற்றமடைந்து வருவதால் ஆட்சியாளர்களின் ஆளுமைத்திறம் ஒவ்வொரு நாளும் கேள்விக்குறியாகிறது.

அண்டை நாடுகளுடன் நட்புறவு இன்மையால் படையும் அரணும் பொருளாதாரச் சிதைவுக்கு வழிவகுக்கிறது. தெற்காசியப் பகுதியில் எப்பொழுதும் சண்டை நடந்த வண்ணம் உள்ளது.

எல்லிவந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே; அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைந்தனவே
(புறம்., 305)

என்று சொல்லத்தக்க அரசியல், பொருளாதார அறிஞர்கள் இத்துணைக்கண்டத்தில் இல்லாது வெறுமைநிலை காணப்படுகிறது. புறநானூற்றை, 'Four hundred poems of war and wisdom' என மேலைநாட்டார் மொழிபெயர்த்தனர்; போர் இருக்கிறது; அறிவு இல்லை என்ற நிலை உள்ளது. இப்பொருள்குறித்து மேலும் ஆய்வு மேற்கொள்ள இக்கட்டுரை வழிகாட்டுகிறது. கட்டுரை ஆசிரியர் தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர். பல்வேறு பல்கலைக் கழகங்களில் உலகம் தழுவிய நிலையில் பங்கு கொண்டு பணிபுரியும் பெருந்தகையார்.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

11. குறியிறையார்

முதுமுனைவர் இரா.இளங்குமரன்

நல்லிறையனார் என்பார் சங்கச் சான்றோருள் ஒருவர். இறையனார் என்பாரும் சங்கச் சான்றோருள் ஒருவர். பின்னே, **இறையனார் களவியல்** நூல் கிளர்ந்தது. **குறியிறை** என்னும் சொல்லாட்சியால் பெயர் கொண்டவர் இக்**குறியிறையார்** என்பார். குறுந்தொகை 394-ஆம் பாடலில், **குறியிறைப் புதல்வர்** என இவர் ஆள்கிறார். 'குறியிறை' என்பதன் பொருள் என்ன?

இறையன் வேறு; இறைவன் வேறு; துறையன் வேறு; துறைவன் வேறு என்பது போல. துணைக்கு வருபவன் துணையன்; வாழ்க்கைத் துணையாய் அமைந்த தலைவன் துணைவன்.

'கோயிலை'க் 'கோவில்' ஆக்கியது 19-ஆம் நூற்றாண்டு வரை இல்லாத வழக்கு. இப்பொழுது கோயிலினும், **கோவில்** என்பதேப் பெருகி விட்டது. 'குறியிறை' என்பது, 'குறிய கைச்சந்து' என்று பொருள் வழங்கப்படுகிறது. முழங்கை மடங்கும் சந்துக்கு, 'இறை' என்பது வழக்கமாகக் கூறும் உரை. குறிய இறைப்பு (இறைவாரம்) என்பதும் உண்டு. குறியிறை, புதல்வர்க்குக் காட்டப்பெற்றதே அன்றி வீட்டு இறைவாரத்திற்குச் சுட்டப்பட்டதில்லை. சிற்றூர் இளையரும், உழைக்கும் ஆடவரும் துறவர் சிலரும் இடையில் இறுக்கிக் கட்டும் உடை, தாய்ச்சீலை, கோவணம், குளிசீலை எனப்படுதல் வழக்கு. குறியை இறுக்கிக் கட்டிய உடையினராகப் பட்டினத்தாரும், வண்ணச்சரபம் தண்டபாணிஅடிகளும் தமிழுலகம் அறிய வாழ்ந்தனர். இன்றும் மணிமலை பாலமுருகன் அடிகள் அவ்வுடையரே. மானமறையாகக் கொண்டதும், இறுக்கி அரைஞாணொடு கட்டப்பட்டதுமாகிய

உடை, 'குறியிறை' என்பது வாழ்வியலொடு பொருந்துவதாம். மலைவாழ் சிறுவர் குறிஞ்சி நில மாந்தர் வழியேதான் முல்லை, மருத, நெய்தல் வாழ்வினர் வளர்ந்தனர் என்பதை உணர்தல் வேண்டும்.

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடி
முன்னாள் இனிய தாகிப் பின்னாள்,
அவர் தினை மேய்தந் தாங்குப்
பகையா கின்றவர் நகை விளை யாட்டே

(குறுந்., 394)

இது, வரைவிடை ஆற்றாளாகியக் கிழத்தியை ஆற்றுவிக்கும் தோழி, தலைமகனை இயற்பழித்துக் கூறியது.

"கரியதும் வலியதுமாகிய முழந்தாளை உடைய பெண்யானை ஈன்ற இளைய கன்று, தேனும் மதுவும் பெருகியமலைச் சிற்றூரகத்துக் குறிஞ்சிவாழ்மகள் பெற்ற குறியிறையுடைய குழந்தைகளோடு இங்கும் அங்கும் சுற்றிவந்து ஓடி இன்பஞ் செய்தது முன்னாளில்; அதுவே இந்நாள், அக்குறிஞ்சிவாணர் தினைப்புனத்துப் புகுந்து மேய்ந்து அழிவு செய்வதாயிற்று; அதுபோல், முன்பு கூடி மகிழ்ந்த தலைவர் நிலை, இன்று மறுதலையாகித் துயர் செய்கின்றது" என்று தோழி தலைவன் இயல்பைப் பழித்துக் கூறினாள். கூறியதன் நோக்கம் வரைவை – மணத்தை – நீளவிடாமல் விரைந்து செய்து தலைவி துயரை மாற்றுக என்பதாம்.

கயந்தலை என்பது யானைக் கன்றுக்குப் பெயராதல் போல, இளம் பருவ ஆண்குழந்தைகளைக் 'கயந்தலை', என்னும் வழக்கு நெல்லை வழக்காக உள்ளது. கயந்தலை சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளது. தொல்காப்பியர் சுட்டும் இளமைப் பெயர்களுள் இடம்பெறவில்லை. யானை, கன்று, குழ்வி என்னும் இளமைப் பெயர்களைப் பெறுதலைக் குறிக்கிறார். (1514,1518)

தமிழில் திறனாய்வு மரபு

பேரா. ப.மருதநாயகம்,
ஆய்வறிஞர் (ஓய்வு),
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை -600113.
9442787727

பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் போன்ற பழந்தமிழ் உரையாசிரியர்களைப் பற்றிக் கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்திருப்பினும் அவர்களுடைய உரைகள் படைப்பிலக்கியங்களைப் போன்று தலைமுறைக்குத் தலைமுறை மீள் பார்வைகளுக்கு உட்படுத்தப் பெறவேண்டியவை. குறிப்பாக, மேலை நாடுகளில் இலக்கியத்திறனாய்வு, இலக்கியக் கோட்பாடு ஆகிய துறைகளில் கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள், முன்னேற்றங்கள், செயற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பழம் உரைகள் மீண்டும் மீண்டும் ஆராயத்தக்கவை. இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் மேலைத்திறனாய்வுத்துறையின் போக்கைப் பின்பற்றி இக்கால இலக்கியங்களைப் பற்றி எழுத முனைந்தவர்களில் பலர் ஆங்கிலக்கல்வி பெற்றிருந்தவர்களே தவிர பழந்தமிழ் இலக்கியங்களிலும் உரைகளிலும் ஆழ்ந்த பயிற்சி பெற்றிருக்கவில்லை. எனவே, தாங்களே தமிழில் திறனாய்வுத்துறைக்கு வித்திட்டதாகவும் தாங்கள் எழுதியதே திறனாய்வென்றும் எண்ணி மகிழ்ந்து செயல்பட்டனர். பழந்தமிழ் இலக்கியங்களில் மட்டுமே பயிற்சி பெற்றிருந்தவர்கள் மேலைத் திறனாய்வைப் போன்ற முயற்சி, தமிழில் ஏதுமில்லையென்ற அவர்கள் கூற்றை நம்பி ஏற்றுக் கொண்டனர். உரையாசிரியர்கள் வெறும் உரையாசிரியர்களே தவிர அவர்களை இலக்கியக் கோட்பாட்டாளர்களாகவோ, திறனாய்வாளர்களாகவோ கருத முடியாது என்ற நிலை உறுதி செய்யப்பட்டது. திறனாய்வு என்பது ஓர் இலக்கியம் அல்லது ஆசிரியரின் நிறை குறைகளைச் சொல்வது; நிறைகளை மட்டும்

சுட்டி நயம்பாராட்டுவது திறனாய்வாகாது எனும் கருத்து முடிந்த முடிவாக வலியுறுத்தப்பட்டது. இதற்கு அடுத்த நிலையில் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, தொ.மு.சி. ரகுநாதன் போன்றவர்களின் தாக்கத்தால் சமுதாயவியல் அணுகுமுறை, குறிப்பாக, மார்க்சிய அணுகுமுறை மட்டுமே திறனாய்வாகும் எனும் எண்ணம் மேலோங்கியது; இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பத்துகளில் பெண்ணிய அணுகுமுறை, உளவியல் அணுகுமுறை, தலித்திய அணுகுமுறை போன்றவைகளுக்கும் தமிழ்க் கல்வித் துறையில் இடம் கிடைத்தது. இலக்கியத்தை இலக்கியமாகப் பார்த்தலும் சொல்லாடற் கலையாக பார்த்தலும் மொழிமுதல் படைப்பாகப் பார்த்தலும் அருகியே நிகழ்ந்தன. மேலை இலக்கியக் கோட்பாட்டாளர்கள் சமுதாயவியல் அணுகுமுறைகளையேக் கையாளுகிறார்கள் என்றோ, திறனாய்வியல் மதிப்பீடு கட்டாயத் தேவை என வற்புறுத்துகிறார்கள் என்றோ எண்ணுவது தவறாகும்.

இலக்கியக் கோட்பாட்டுத்துறை வெகுவாக வளர்ந்துள்ள இன்றைய நிலையில் பல அணுகுமுறைகள் இலக்கியங்களின் குறைகளைச் சுட்டும் மதிப்பீட்டைப் புறக்கணித்துவிட்டன என்பதே உண்மை. நிறைகுறைகளின் விமரிசனமே திறனாய்வு என்ற தொடக்க நிலையிலிருந்து மேலைத் திறனாய்வாளர்கள் வெகு தொலைவு இப்பொழுது முன்னேறிவிட்டனர். குறைகளைக் குறிப்பிடும் எதிர்மறைத் திறனாய்வு பயனற்றது எனும் கருத்தை ஹெலன் கார்ட்னர், நார்த்ராப் ஃபிரை போன்ற தலைசிறந்த திறனாய்வாளர்களே எடுத்துரைத்துள்ளனர். “உன்னால் ஒரு நூலில் நிறையேதும் காணமுடியவில்லையென்றால் அதனைத் திறனாய்வு செய்யாதே; நிறை காணமுடிந்தவர்களுக்கு விட்டுவிடு” என்பது நார்த்ராப் ஃபிரை திறனாய்வாளர்களுக்குக் கூறும் அறிவுரையாகும். “நிறைகுறைகளைப் பட்டியலிடுவது திறனாய்வாளனின் பணி அன்று, ஓர் இலக்கியத்திற்கு விளக்கமளிப்பதே (elucidation of a work of art) அவன் பணி” என்று டி.எஸ்.எலியட் கூறுவார். இவ்விளக்கத்திற்காக அவன் கையாளும் கருவிகள் ஒப்பிடுதலும் பகுத்தாய்தலும் (comparison and analysis are the two tools of a

critic) என்பதும் அவரது கூற்றேயாகும். இப்பணியினையே உரையாசிரியர்கள் திறம்படச் செய்துள்ளனர். எடுத்துக்கொண்ட கவிதைக்குச் சொல்லுக்குச் சொல் பொருள் தந்து முழு விளக்கம் தருவதும் வேறு கவிதைகளை மேற்கோள் காட்டுவதும் கவிதையின் பொருளை நுட்பமாகப் பகுத்தாய்வதும் அவர்கள் கொண்ட தலையாய நோக்கங்கள்.

ஓர் இலக்கியப் படைப்பாளனின் முதல் கடமை மொழிக்கா, சமுதாயத்திற்கா என்ற கேள்வி சிக்கல் நிறைந்தது. அவன் முதலில் மொழிக்கே பொறுப்புடையவன் என்றும் இரண்டாவது நிலையிலேயே சமுதாயக்கடன் வைக்கப்பட வேண்டும் என்றும் (A poet's first responsibility is to language; only his second responsibility is to society) எலியட் கூறுவார். ஓர் இலக்கியப் படைப்பின் முதல் நோக்கம் இன்பம் அளித்தலா, அறம் கூறுதலா என்ற கேள்விக்கு விடையளித்த கோலரிட்ஜ், முருகியல் இன்பம்தரலே முதல் நோக்கம் என்றார். சமுதாயச் சீர்த்திருத்தக்காரர்கள் சமுதாய நலனுக்கு முதலிடம் அளிப்பது சரியே. இலக்கியம் படைப்போர் சமுதாயக் கடமை உடையவராயினும் முருகியல் இன்பம் கருதி மொழி ஆளுகைக்கே முதலிடம் தரவேண்டும் என்பது இவ்வறிஞர்களின் கருத்து ஆகும். சமுதாயச் சீர்திருத்தம் கருதி நூலோ கட்டுரையோ எழுதுவோர் மொழிக்கூறில் அக்கறை காட்ட வேண்டியதில்லை. காந்தியடிகள் தம் சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும் இலக்கிய முயற்சியை மேற்கொள்ளவில்லையென்பதும் தம்முடைய நோக்கம் இலக்கிய இன்பம் அன்றென்றும் தெளிவுபடுத்தினார். இந்நிலை போற்றுதற்குரியது. ஆனால், இலக்கியம் படைக்கிறேன் என்று தம் செயலைத் தொடங்குவார் அது கவிதையாயினும் நாவலாயினும் நாடகமாயினும் சிறுகதையாயினும் மொழிக்கே முதலிடம் தரவேண்டும். இதுவே, தொல்காப்பிய, சங்க இலக்கியக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டை அடிப்படையாக வைத்தே தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளை வரையறை செய்கிறார். இதனால்தான் புலவன், 'அம்சொல் நுண்தேர்ச்சிப்புலவன்' என்றும் 'சொல்லேருழவன்' என்றும் தமிழ் இலக்கியங்களில் போற்றப்படுகிறான். உரையாசிரியர்கள்

கவிதையின் சொற்களில் முழுக்கவனம் செலுத்துவதும் இது கருதியே. அவர்கள் சமுதாயக்கடமை அறியாதவர்கள் என்றோ, சமுதாய உணர்வு அற்றவர்களென்றோ முடிவு செய்வது தவறாகும்.

மொழிக்கு முதலிடம் கொடுக்கின்ற திறனாய்வு அணுகுமுறைகள் மேலைநாடுகளில் இன்று பலவிருக்கின்றன. புதுமைத் திறனாய்வு (New Criticism), வடிவியல் திறனாய்வு (Formalist Criticism), மொழியியல் திறனாய்வு (Lingustic Criticism), நடையியல் திறனாய்வு (Stylistic Criticism) போன்றவையெல்லாம் இத்தகையவே. கட்டவிழ்ப்பு அணுகுமுறைத் திறனாய்வாளர்களில் ஒருவரெனக் கருதப்பெறும் ஹாரல்டு புளும் (Harold Bloom) தம்முடைய அணுகுமுறையை முருகியல் அணுகுமுறை (Aesthetic approach) என்றே சுட்டுவார்.

தொல்காப்பிய, சங்க இலக்கியக் கோட்பாடுகளை உள்வாங்கிக் கொண்டு சான்றோர் செய்யுட்களுக்கும் திருக்குறள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்ற இலக்கியங்களுக்கும் உரையெழுதிய நம் உரையாசிரியர்கள் இன்றைய மேலை அணுகுமுறைகள் முன் வைக்கும் சில புதிய கருத்துகளைச் செயல்படுத்தியுள்ளனர் என்பது வியப்புக்குரியது. அன்னார், கவிதைக்குப் பொருள் தரும் போது செய்யுள் உறுப்புகள் யாவும் இணைந்து செயல்பட்டு செய்யுளின் மூலப்பொருளை வெளிப்படுத்து மாற்றை எடுத்துரைப்பர்; தாம் கூறும் பொருளுக்குப் பொருந்துமாறு சொற்களின் இலக்கணத்தை அடையாளம் காட்டுவர்; அணிகளை இனம் காண்பர்; பாடபேதங்களைப் பட்டியலிடுவர்; பொருள் எளிதில் புரியாத இடத்தெல்லாம் தெளிவுபடுத்துவர் ; சமயம், இசை, நாட்டியம் போன்ற பிறதுறைச் செய்திகள் வருமாயின் நீண்ட விளக்கம் தருவர்; முன்னைய உரையாசிரியர் மாறுபட்ட பொருளைத் தந்திருப்பின் அதன் பொருத்தமின்மையை ஆய்ந்துரைப்பர்; வேண்டிய இடங்களிலெல்லாம் வேறு நூல்களிலிருந்து மேற்கோள்கள் வேண்டிய அளவு தருவர்; ஒரு முழு நூலுக்கு உரைசெய்யும்போது ஒரு பாடலுக்கும் அடுத்து வரும் பாடலுக்கும், ஒரு அதிகாரத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பையும், ஏன் அவ்வரிசையில் அவை அமைக்கப்பட்டுள்ளன

என்பதையும் விளக்குவதன் மூலம் நூலின் முழுமையையும் ஒழுங்கையும் (Integrity of the text) யாவரும் அறியச் செய்வர். நூலின் விளக்கம் (Elucidation) என்று மேலையோர் குறிக்கும் திறனாய்வாளனின் பணி முழுவதும் இவற்றில் அடங்கும்.

ஹீப்ரு மொழியில் அமைந்த விவிலியத்தின் பழைய ஏற்பாட்டுப் பகுதிக்கு இடைக்காலத்தில் யூத அறிஞர்கள் எழுதிய விரிவுரை, ‘exegesis’ என்று அழைக்கப்பெற்று அதில் காணும் நுட்பங்களும் அவ்வறிஞர்களின் நுண்ணறிவு, நூலறிவு, பட்டறிவு ஆகியவையும் பெரிதும் பாராட்டப்பெறும். நம் உரையாசிரியர்கள் தந்துள்ள விரிவுரைகள் அத்தகையவே.

பின்னை அமைப்பியலார், ஒரு கவிதை ஒரு நிலைத்த பொருளைத் (fixed) தருகிறது என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. சொற்கள் யாவும் கவிஞனின் கட்டுக்குள் இருக்கமுடியாதென்பதால் அவன் கூற விழையும் பொருளுக்கு நேர் எதிரான பொருளையும் கவிதை தரலாம் என்பது அவர்களின் அறைகூவலாகும். பரிமேலழகர், தான் கூறும் உரையினின்றும் மாறுபட்ட உரையை மணக்குடவரோ மற்றவரோ கூறியிருப்பின் அதனைச் சுட்டி ஏற்புடையதாயின் ஏற்றுக் கொள்ளவும் காணலாம். ‘வையம் காவலர் வழி மொழிந்தொழுக’ (8) எனும் புறப்பாடலுக்குப் பேராசிரியரும் பழம் உரையாசிரியரும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட விளக்கங்களைத் தருவர். ‘ஒல்லுவது ஒல்லும் என்றலும்’ (புறம்.196) எனத் தொடங்கும் ஆவூர்மூலங்கிழார் பாடலில், ‘நோய் இலராக நின்புதல்வர்’, ‘சிறக்க, நின் நாளே’ எனும் தொடர்களுக்குக் கூறக்கூடிய முரண்பட்ட இருவேறு பொருள்களையும் உரையாசிரியர் பொருத்தமுடையவனாகக் கொள்வதும் கருதத்தக்கது.

கட்டவிழ்ப்புத் திறனாய்வாளர்களின் தனிச்சிறப்புக்குரியவர் என்று கருதப்பெறும் ஜெ.ஃப்ரி ஹார்ட்மென் தமது, ‘திறனாய்வு எந்த அளவுக்குப் படைப்பிலக்கியமாக இருக்கலாம்?’ (How Creative Should Literary Criticism Be?) எனும் கட்டுரையில் திறனாய்வுக்கும் படைப்பிலக்கியத்திற்கும் இடையேயுள்ள எல்லைக்கோடு நீக்கப்பட

வேண்டியதென்றும் திறனாய்வு, படைப்பிலக்கியத்திற்கு ஊழியம் செய்யும் பணிப்பெண்ணாக இரண்டாம் நிலையில் இருக்கவேண்டியதில்லையென்றும் சில திறனாய்வாளர்களின் கட்டுரைகள் படைப்பிலக்கிய நிலையைப் பெற்றிருக்கின்றன என்றும் இலக்கிய வகைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து செயல்படுவதில், தவறில்லையென்றும் வாதிடுவார். இது நம் பழம் உரைகளுக்கும் முற்றும் பொருந்தும். முருகியல் இன்பம் தரும் சுருக்கம், தெளிவு, நடையழகு, கருத்தாழம் ஆகிய படைப்பிலக்கியப் பண்புகளைப் பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் ஆகியோர் உரைகளில் எங்கும் காணலாம். இதற்குத் தொல்காப்பியம் சுட்டும் இலக்கியக் கோட்பாடும் துணைநின்றது.

பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே
அங்கதம், முதுசொல்லொடு, அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்.
(தொல்காப்பியம், 1336)

பாட்டு, உரை, நூல், (நாட்டார்) வாய்மொழி, விடுகதை, அங்கதம், பழமொழி ஆகிய ஏழும் தமிழகத்து வழங்கிவரும் இலக்கிய வகைகள் என்றே தொல்காப்பியம் கூறும். இவற்றுள் (நாட்டார்) கதை, பாடல், பழமொழி ஆகியவற்றின் இலக்கியத் தன்மை இப்பொழுதுதான் மேலைநாட்டாரால் உணரப்பட்டு வருகிறது.

உரையாசிரியர்களின் உரைகள் படைப்பிலக்கியமாகக் கொள்ளத்தக்கவை என்பதற்கு ஓரிரு சான்றுகளே போதும். அடியார்க்கு நல்லார் பலவிடங்களில் உரையையும் கவிதை நயத்தோடு தந்து விட்டுப் பின் அருஞ்சொற்பொருள் கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளதை அறியலாம். 'மங்கல வாழ்த்துப்பாடலின்' முதல் பன்னிரண்டு வரிகளுக்கு அவர் எழுதும் உரை வருமாறு:

நாம் திங்களைப் போற்றுவேம்; திங்களைப் போற்றுவேம்; அஃது
எற்றுக்கெனில், தாது பரத்தல் செய்த மாலையையுடைய சென்னியுடைய குளிர்ச்சியையுடைய வெண்குடை போன்று பொதுவற இவ்வுலகிற்கு அளிசெய்தலான் என்க.

நாம் ஞாயிற்றைப் போற்றுவேம்; ஞாயிற்றைப் போற்றுவேம்;
அஃது எற்றுக்கெனின், காவிரி நாட்டை யுடையானுடைய ஆழிபோலப் பொழிவுபெற்ற கொடு முடியையுடைய மேருவை
வலமாகத் திரிதருலான் என்க.

நாம் பெரிய மழையைப் போற்றுவேம்; பெரிய மழையைப் போற்றவேம்; அஃது எற்றுக்கெனின், அச்சத்தைத்தரும் கடல்சூழ்
உலகிற்கு அவன் அளி செய்யுமாறு போல மாறாது மேலாய் நின்று
தன்பெயலான் வளத்தைச் சுரத்தலான் என்க.

நாம் புகாரைப் போற்றுவேம்; புகாரைப் போற்றுவேம்; அஃது
எற்றுக்கெனின், மிக்க கடலை வேலியாகவுடைய உலகின்கண்
அவன்குலம் புகழ்வார் இதனையும் புகழ்வாராதலின் என்க. (உ.வே.சா.37)

மூலத்தின் நலம் புலப்பட உரைசொல்லிச் செல்லும்போது மூலத்திலுள்ள 'Symmetry' எனும் முருகியல் இன்பம்தரும் கூறையும் உரையில் கொண்டுவருதல் நோக்கற்பாலது.

மனையறம் படுத்த காதையில் வரும் 'சுறும்பு உணக் கிடந்த நறும்பூச்சேக்கை'(28) எனும் வரிக்கு 'சுரும்புகள் உண்டற்குப் பாரித்து வைத்தாற்போலக் கிடந்த நறும்பூஞ்சேக்கை' என்று முதலில் உரையெழுதிவிட்டுப் பின்னர், **இனி, அதிகாரப் புறனடையால் (தொல். குற்றியலுகரம் 78) உகரம் கெடுத்து உண என்பதனைப் பெயர்ப்படுத்துச் சுரும்புகள்தாம் பலவகையுணவும் உளவழி அவ்வக் காலத்து ஆண்டுச்சென்று ஏறியும் இழிந்தும் சுழன்றும் மெய்வருந்தாது அவையெல்லாம் ஒருகாலத்து ஒருவழி உண்ணும் உணவு கிடந்த தன்மையொத்த பூஞ்சேக்கை எனவும் அமையும்** (உ.வே.சா. 49) என்று சேர்க்கும்போது சுரும்புகளின் நடமாட்டம் பற்றி ஒரு சிறு கவிதையே இயற்றிவிடுகிறார் அடியார்க்கு நல்லார்.

நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்திற்கும் பத்துப்பாட்டிற்கும் குறுந்தொகையில் இருபது செய்யுட்களுக்கும் கலித்தொகைக்கும் சீவக சிந்தாமணிக்கும் எழுதியுள்ள உரைகள் நமக்குக் கிடைத்துள்ளன. இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், ஆளவந்த பிள்ளையாசிரியர், பரிமேலழகர் ஆகியோர்க்கெல்லாம் பின் வாழ்ந்தவர் நச்சினார்க்கினியர். இவர் சொல்லுக்குப் பொருள் உரைத்தலையும், பழைய செய்யுட்களையேனும் கருத்தையேனும் உரைநடையாக எழுதலையும், உள்ளுறை உவமத்து ஒளித்த பொருளைக் குறிப்பறிந்து உணர்த்தலையும், இறைச்சிப் பொருளைத் திறம்படத் தெரிந்து அறிவித்தலையும், பாட்டிடைவரும் மெய்ப்பாட்டைச் சுட்டுதலையும், முறைப்பட வினையை முடித்துக் காட்டுதலையும் வழக்கமாகக் கொண்டவரென்றும் சீவகசிந்தாமணியில் வெளிப்படையாகக் கூறப்படாமலிருந்தும் இன்ன செய்தி இன்ன காலத்தில் நிகழ்ந்தது என்று சில குறிப்புகளைக் கொண்டு ஊகித்து அறிந்து கூறியுள்ளாரென்றும் சீவகசிந்தாமணிக்கு முறையாக உரையெழுதுவான் வேண்டி ஆருகத நூல்கள் பலவற்றைப் பயின்றாரென்றும் உ.வே.சா. தெரிவிப்பார். இவரால் தமது உரைகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள மேற்கோள் அமைந்த பழந்தமிழ்நூல்கள் எண்பதுக்கும் மேலாகும் என்பதோடு அவரது விரிந்த, ஆழமான கல்விப் பரப்பையும் அவை புலப்படுத்தும். தமக்கு முன் வாழ்ந்த

உரையாசிரியர்களின் விளக்கங்களில் சரியென்று தமக்குப்பட்டவற்றை அவ்வாறே எடுத்துக்கொள்ளுதலும் தவறென்று தோன்றியவற்றைக் காரணம் கூறி மறுத்தலும் அவரது தன்னம்பிக்கையையும் பணிவையும் உணர்த்தும். முல்லைப்பாட்டுக்கு அவர் எழுதியுள்ள உரை குறையுடையதென்று மறைமலையடிகளார் எழுதியுள்ள கட்டுரை பற்றிக் கருத்தறிவித்த தெ.பொ.மீ., நச்சினார்க்கினியர் செய்த பிழையையே அடிகளும் செய்துள்ளார் என்று விளக்கிக் காட்டுவது நாம் எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

தொல்காப்பியத்திலும் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் முழுகித் திளைத்த நச்சினார்க்கினியர் வெறும் பதவுரை கூறிப் பொருளற்ற நயம் பாராட்டும் உரையாசிரியரா, அல்லது கவி உள்ளம் கண்டு கவிதையோடு இரண்டறக் கலந்து தமது பட்டறிவைப் பகிர்ந்து கொள்ளவல்ல திறனாய்வாளரா என்பதைக் குறிஞ்சி உரையை மட்டும் வைத்து முடிவு செய்தல் இயலும்.

ஸ்வெலபில், சல்மன், துபையான்ஸ்கி போன்ற மேலைத் திறனாய்வாளர்களெல்லாம் சான்றோர் படைப்புகளை முருகியல் அணுகுமுறையில் பார்க்காது சமுதாயவியல் அணுகுமுறை முதலான பல புறவய (Extrinsic approaches) அணுகுமுறைகளில் நோக்குதற்கு ஒரு காரணம் அன்னார் சங்க இலக்கியங்களை அவற்றின் பழம் உரைகளின் வழி நெருங்காமையே. அகவய அணுகுமுறைகள் (Intrinsic approaches) உரைகளின் துணையோடு அவர்களால் மேற்கொள்ளப்படுமானால் சங்க இலக்கியங்களின் புதிய பரிமாணங்களை அடையாளம் காண்பதோடு உரையாசிரியர்களின் திறனாய்வுத் திறனையும் அவர்கள் அறிந்து கொள்ள இயலும்.

ஃபிரான்சில், இலக்கியங்களைப் பயிற்றுவிப்பதற்காகத் தோன்றிய பனுவல் விளக்கம் (Explication de texte) மேலைப் புதுமைத் திறனாய்வாளர்களுக்கு வழிகாட்டியாய் இருந்தது.

"It involves the painstaking analysis of the meanings, relationships, and ambiguities of the words, images and small units that make up a literary work".

ஓர் இலக்கியப் படைப்பைத் தோற்றுவிக்கும் சொற்களின் பொருள்கள், உறவுகள், பொருள் மயக்கங்கள், காட்சியுருக்கள், பிற சிறு கூறுகள் ஆகியவற்றின் உழைப்புமிக்க பகுப்பாய்வே இவ்வணுகுமுறையாகும் என்பர்.

நம் உரையாசிரியர்கள் மேற்கொண்டது, அடிப்படையில் இத்தகைய அணுகுமுறையாகும். ஒரோவழி பனுவலுக்கு வெளியே சென்று தமது பின்புலத்திற்கேற்ற தமது சமுதாய எண்ணங்களைத் திணிப்பது உண்டாயினும் மேலே குறிப்பிட்ட அகவய அணுகுமுறையின் நிறைகளை அவர்களுடைய உரை விளக்கங்களில் காணலாம்.

குறிஞ்சிப்பாட்டு எனப் பெயர் பெற்றமைக்கு அது இயற்கைப் புணர்ச்சியும் பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்கள் கூறுதலும் முதல் பொருளாலும் கருப்பொருள்களாலும் குறிஞ்சிக்கு உரியனவற்றையே கூறுதலும் காரணங்களாகும் என்ற விளக்கத்தோடு உரையைத் தொடங்குவார் நச்சினார்க்கினியர். அடுத்து அதன் பாடுபொருள் பற்றி,

'அறத்தொடு நிற்கும் காலத்தன்றி அறத்தியல் மரபிலள் தோழி யென்ப' (தொல். பொருளியல். நூற்பா. 12) என்பதனால் தோழி அறத்தொடு நிற்கும் காலம்வந்து செவிலிக்கு அறத்தொடு நின்ற வழி அதற்கிலக்கணம் கூறிய, "எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல் கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாடு உண்மை செப்பும் கிளவியோடு தொகைஇ அவ்வெழுவகையது என்மனார் புலவர்" (தொல்.பொருளியல்.நூற்பா, 13) என்னும் சூத்திரத்து ஏழனுள், கூறுதல் உசாதல் ஒழிந்த ஆறும் கூறி அறத்தொடு நிற்கின்றாள் என்று உணர்க என்று விளக்குவார்.

அறத்தொடு நிற்றல் என்பது தலைமகள் அன்பில் சிறந்த ஒருவனைத் தனக்குரிய தலைவனாக மனத்திற்கொண்ட முடிவினைத் தான், தோழிக்கு அறிவித்தலும் தோழி செவிலித்தாய்க்குத் தகுதியுடைய மொழிகளால் அறிவித்தலும் ஆகும். அறத்தொடு நிற்கும் காலமாவது தலைவியை அயலார் மணம்பேச வருதலும்

தலைவியின் மெலிவறிந்த செவிலி அம்மெலிவு நீங்க வேலனைக் கொண்டு வெறியாட்டு நிகழ்த்துதலும் முதலியன நிகழும் நிலையில் உயிரினும் சிறந்த தலைவனோடு தனக்குளதாகிய நட்பினைப் பெற்றோர்க்குப் புலப்படுத்தல் வேண்டும் என்னும் எண்ணம் தலைவியின் உள்ளத்தே தோன்றி அதனைப் புலப்படுத்தும் காலம்; அக்காலத்திலன்றித் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றலை மேற்கொள்ளுதல் கூடாது; எனவே, தலைவியின் குறிப்புணர்ந்த பின்னரே தோழி அறத்தொடு நிற்றற்குரியள்.

எளித்தல், தலைவனை எளியவனாகக் கூறுதல்; ஏத்தல், அவனை உயர்த்திக்கூறல்; வேட்கை உரைத்தல், அவனது விருப்பத்தை மிகைப்படுத்திக் கூறுதல்; கூறுதல் உசாதல் ஆவது தலைவியும் தோழியும் வெறியாட்டு நிகழும் காலத்தும் தலைமகள் பால் பிரிவின் துயர் மிக்க நிலையில் தம்மிருவர்க்குள்ளே நிகழும் கூற்றிலும் வேலன் கட்டுவிச்சி முதலியோருடன் நிகழும் கூற்றிலும் தோழி வினாவுதல்; ஏதீடு ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன காத்து எம்மைக் கைக்கொண்டான் எனவும், பூத்தந்தான் தழை தந்தான் எனவும் இவை முதலிய காரணம் இட்டு உணர்த்தல் (தலைவன் தலைவியை எதிர்ப்பட்டமைக்குக் காரணம் இட்டுரைத்தல்); தலைப்பாடு இருவரும் தாமே எதிர்ப்பட்டார், யான் ஏதும் அறிந்திலேன் எனக்கூறுதல்; உண்மை செப்பும் கிளவியாவது நிகழ்ந்தது நிகழ்ந்தபடியே கூறுதல்.

இவையெல்லாம் இவ்விரு நூற்பாக்களுக்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கங்கள். கூறுதல் உசாதல் என்பதனை, கூறுதல், உசாதல் என இரண்டாகவும் ஏதீடு, தலைப்பாடு என்பதனை ஒன்றாகவும் கொள்ளும் இளம்பூரணரிடமிருந்து நச்சினார்க்கினியர் வேறுபடக் காணலாம். கூறுதலை, தலைவியை தலைவனுக்குக் கொடுக்கவேண்டும் என்பது படக்கூறுதலென்றும் உசாதலை வெறியாட்டும் கழங்கும் இட்டுரைக்கும்போது வேலனோடாவது பிறரோடாவது தோழி உசாவுதல் என்றும் ஏதீடு தலைப்பாடு என்பதை யாதானுமோர் ஏதுவை இட்டுக் கொண்டு தலைப்பட்டமை கூறுதல் என்றும் இளம்பூரணர் விளக்குவார்.

குறிஞ்சிப் பாட்டிற்கு உரை வரையும் நச்சினார்க்கினியர் கூறுதல் உசாதல் நீங்கலாக மற்ற ஆறு வகையால் அறத்தொடு நிற்றல் நிகழும் என்று கூறி, அவற்றை ஆங்காங்கே எடுத்துக் காட்டுகிறார். தோழி தலைப்பாடு கூறுதல், ஏதீடு கூறுதல், எளித்தல் கூறுதல், ஏத்தல் கூறுதல் என்றெல்லாம் அவளுடைய கூற்றுப் பகுதிகள் அடையாளம் காட்டப்பெறுகின்றன.

குறிஞ்சிப்பாட்டில் வரும் உரையாடல்களும் நிகழ்ச்சிகளும் தொல்காப்பியர் கூறும் அகத்திணை இலக்கணத்திற்குப் பொருந்தி வருதலை நச்சினார்க்கினியர், தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டிச் சொல்லாமல் மேற்செல்வதில்லை. தலைவி தன் காதலைத் தோழியிடம் கூற, தோழி அதனைச் செவிலியிடம் தெரிவிக்கும் போது, இது முறையாக நடந்ததென்பது அவரால் வலியுறுத்தப் படுகிறது. தலைவி கூற்றினைக் கொண்டு தோழி கூறினாள் என்பதற்கு,

வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தல் கண்ணும்
தானே கூறும் காலமும் உளவே.
(தொல்.களவு.நூ.21)

என்பதனுள், 'தானே கூறும் காலமும் உளவே' என்றிருப்பதைக் காண்க என்பார். தலைவி இவ்வாறு மறை புலப்படுத்தல் சரியாவென்ற கேள்வியை எழுப்பி,

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான.
(தொல்.பொருளியல்.நூ.15)

(அடக்கமும் மறை புலப்படாமல் நிறுத்தும் உள்ளமும் மனக்கோட்டம் இன்மையும் களவின்கட் செய்யத் தகுவன கூறலும் நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும் அறிவித்தலும் உள்ளக் கருத்தறிதல் அருமையும் ஆகிய எல்லாம் பெண்களுக்குரிய சிறப்பியல்புகளாம்) என்று சொல்லப்பட்டிருப்பினும்,

உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்
அப்பொருள் வேட்கைக் கிழவியின் உணர்ப.
(தொல்.பொருளியல்.நூ.13)

(தலைவி, துன்பமுற்ற காலத்தன்றித் தோழி அவ்வாறு மறை புலப்படுத்திக் கூறாள் ஆதலின் அம்மறை புலப்படுத்துதல் விருப்பத்தைத் தலைவி காரணத்தால் தோழி உணர்வள்) என்பதால் மறைபுலப்படுத்தலும் ஆகுமென வழுவமைத்தலின் இவ்வாறு தலைவி கூறினாள் என்று விடை தருவார். குறிஞ்சிப்பாட்டு,

பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய
மான்கணம் மரம் முதல் தெவிட்ட ஆன்கணம்
கன்று பயிர்குரல மன்று நிறைபுகுதர
ஏங்கு வயிர் இசைய கொடுவாய் அன்றில்
ஓங்கு இரும் பெண்ணை அகம் மடல் அகவப்
பாம்புமணி உமிழப் பல்வயின் கோவலர்
ஆம்பலந்தீங்குழல் தெள்விளி பயிற்ற
ஆம்பல் ஆய்இதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி அந்தணர் அயரக் கானவர்
விண்தோய் பணைமிசை ஞெகிழி பொத்த
வானம் மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானம்
கல்என்று இரட்டப் புள்ளினம் ஒலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் கானூஉ
(216-230)

என்னும் அடிகளில் மாலை வந்தமை சொல்லப்படுகிறது. "பல்கதிர் கொண்ட ஞாயிறு மாலையில் மறைகிறது. மான்கூட்டம் மரத்தடியில் திரள்கிறது. பசுக்கூட்டம் கன்றுகளை அழைக்கும் குரலை

உடையனவாய் மன்றுகள் நிறையப் புகுகின்றன. ஊதுகின்ற கொம்பு போன்ற ஓசையை உடைய வளைந்த வாய்கொண்ட அன்றில் பெரிய பனையின் உள்மடலிலிருந்துப் பேட்டை அழைக்கின்றது. பாம்பு மணியை உமிழ்கின்றது; ஆம்பலின் இதழ்கள் தளையவிழ்கின்றன; மகளிர் விளக்கேற்றுகின்றனர்; அந்தணர் அந்தித்தொழில் செய்கின்றனர்; கானவர் தீமூட்டுகின்றனர்; மேகம் மலையிடத்தைச் சூழ்ந்து கறுக்கின்றது; காட்டு விலங்குகள் ஒன்றற்கொன்று மாறிக் கூப்பிடுகின்றன; பறவைகள் ஆரவாரிக்கின்றன; சினங்கொண்ட வேந்தன் போர்க்குச் செல்லுதல் போல் மாலை விரைகின்றது". இம்மாலை வருணனையில் "முல்லைக்குரிய கருப்பொருளாகிய ஆன்கணமும் பாம்பும் கோவலரும் ஆம்பற் குழலும் **முல்லைக்குரிய முதற் பொருளாகிய மாலையும்** நெய்தற்குரிய கருப்பொருளாகிய அன்றிலும் பனையும் வந்தவாறு கண்டுகொள்க" என்று நம்பியகப்பொருள் உரைகூறும். நச்சினார்க்கினியர், 'நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப' எனும் தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பா (12) வைக்காட்டி 'எனவே காலம் இரண்டும் மயங்கும் என்றலின் குறிஞ்சியில் மாலைக் காலம் கூறினார்' என்பார்.

பாட்டில் வரும் உள்ளுறை உவமங்களை விளக்குதலும் உவமைகளின் பொருத்தம் கூறலும் தமது கடமையென மேற்கொண்டு அதனைச் செம்மையாகச் செய்தல் நச்சினார்க்கினியரின் வழக்கம். மேலும்,

பழுமிளகு உக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் தீம்கனி உதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொடு ஈண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர் செத்து அயின்ற தோகை வியல் ஊர்ச்
சாறு கொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடு மகள்
கயிறு ஊர் பாணியில் தளரும் சாரல்
(187-194)

என்னும் வரிகளுக்குப் "பழுத்த மிளகு சிந்திக்கிடக்கின்ற கற்பாறையிடத்து நீண்ட சுனையிலே பெரிய அடியினையுடைய மாவினுடைய இனிய பழங்கள் உதிர்ந்தனவாக அப்பழத்தாலும் பலவினுடைய விரிந்த தேன் பரக்கின்ற நறிய பழத்தாலும் உண்டான கட்டெளிவு நிரம்புதலால் தன்னை நுகர்கின்ற ஈயினைத் தள்ளியுகுத்த தேனாலே வந்து திரளுகையினாலே தனக்கு எளிய நீராகக்கருதி அத்தேறலை உண்ட மயில், விழாக்கொள்ளுதற்குரிய அவ்விடங்களையுடைய அகற்சியையுடைய ஊர்களில் விழாக் கொள்ளுதலையுடைய களத்தே மிக்கு அரித்தெழுகின்ற ஓசையைக் கூட்டுதலையுடைய இனிய வாத்தியங்கள் ஒலிப்ப ஆடுகின்ற மகள் கழாய்க்கயிற்றிலே ஏறி ஆடுகின்ற தாளத்தினால் தான் ஆற்றாது தளருமாறு போலத் தளரும் சாரலை உடைய குன்று" என்று பொருள் உரைத்து, "மிளகு உக்கப் பாறை அந்நிலத்து மாக்கள் உறைகின்ற ஊராகவும் நெடுஞ்சுனை தலைவன் குடியாகவும் மாம்பழத்தாலும் பலாப்பழத்தாலும் விளைந்த தேறல், தந்தையாலும் தாயாலும் உளனாகிய, தலைவனாகவும் பிரசம் இவரைக் கூட்டின பால்வரைத் தெய்வமாகவும் அதனை உண்ட மயில் உயர்ந்த தலைவனைத் தன் குலத்திற்கு வந்தானாகக் கருதி நுகர்ந்த தலைவியாகவும் அத்தேறலில் பிறந்த களிப்பு, களவொழுக்கத்தால் பிறந்த பேரின்பமாகவும் மயில் ஆடவாற்றாத தன்மை வருந்திக் குறைந்த தன்மையாகவும்" என்று உள்ளுறை உவமம் கொள்ள வேண்டும் என்பார். தொடர்ந்து,

> **வரையர மகளிரின் சாஅய் விழைதக**
> **விண் பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தள்**
> **தண்கமழ் அலரி தாஅய் நன்பல**
> **வம்புவிரி களத்தில் கவின்பெறப் பொலிந்த**
> **குன்றுகெழு நாடன்**
>
> **(195-199)**

என்னும் அடிகளுக்கு, "விண்ணைத் தீண்டுகின்ற சிகரங்களில் கிளைத்த செங்காந்தளினுடைய குளிர்ந்த மணக்கின்ற பூக்கள்

கீழே வரையர மகளிர் பரந்து விளையாடுதலில் தந்நலம் சிறிது கெட்டு விரும்புதல் தரும்படி கீழே வந்து பரந்து நன்றாகிய பலவாகிய கச்சுப்பரந்த களம்போலே அழகுபெறப் பொலிவு பெற்ற மலை பொருந்தின நாடன்'' என்று பொருள்கூறி, "உயர்ந்த நிலத்தே நின்று மணக்கின்ற காந்தள் வரையர மகளிரால் கீழ் நிலத்தே பரந்து அவ்விடத்தைக் கச்சு விரித்தாற்போல அழகு பெறுத்தும் என்றதனால், நம்மில் உயர்ச்சியையுடைய தலைவன் நமது நல்வினையால் தனது பெருமை தானும் ஒழிந்து இவ்விடத்தே வந்து கூடி நமக்கும் உயர்ச்சியுளதாக்கி நம்மை அழகு பெறுத்து நின்றானென்று உள்ளுறை உவமம் எய்திற்று'' என்று உரை விரிப்பார்.

குறிஞ்சிப் பாட்டில் திணைக்கதிர்க்கு, 'யானைக்கையும்' (35-8), மேக முழக்கத்திற்கு 'முரசின் ஒலி'யும் (49-50), அருவிக்கு, 'துகிலும்' (55), சுனைக்குப் 'பளிங்கும்' (57), சிறுமுதுகிலே தாழ்ந்து கிடந்த கரிய கூந்தலுக்குப் 'பொன்னில் பதித்த நீலமணியும்' (59-60), நாய்க்கு 'வீரரும்' (129-31), வண்டின் ஓசைக்கு, 'யாழ் நரம்பின் ஒலி'யும் (147-8), வில்லிற்குப் 'பாம்பும்' (158), யானைக்குக் 'கூற்றுவனும்' (165) யானையின் முழக்கத்திற்கு, 'இடியும்' (162-5) உவமைகளாய் வருகின்றன. இவற்றுள் உவமையின் பொருத்தமும் சிறப்பும் வெளிப்படையாகத் தெரியாத வழி அவற்றைத் தெளிவிப்பார் நச்சினார்க்கினியர்.

இகல் மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினை இடைநின்ற சான்றோர் போல
இரு பேர் அச்சமோடு யானும் ஆற்றலென்
(27-29)

எனும் அடிகளில், 'பகை கொண்ட இரு மன்னரைச் சந்து செய்விக்கும் பணியை மேற்கொண்ட சான்றோர் போல, இரண்டு பெரிய அச்சங்களாலே யான் அல்லல் உற்றேன்' என்று தோழி கூறுகின்றாள். இவ்விரு பேரச்சங்கள், தோழி ஒருபுறம் செவிலிக்கு அஞ்சுதலும் மறுபுறம் தலைவியின் துன்பத்திற்கு அஞ்சுதலும் என்பது உரையாசிரியரின் விளக்கம். மேலும்,

மாறு பொழுது ஓட்டிய புகல்வின் வேறுபுலத்து
ஆ காண் விடையின் அணிபெற வந்து...
(135,136)

என்ற அடிகளில் தலைவன், பகையாகிய காளைகளையெல்லாம் வென்று தானறியாத நிலத்தில் புதிய ஆவைக்காணும் ஏறுபோன்று வந்தான் என்று உவமிக்கப்படுகிறான். 'வேட்கை மிகுதி கூறுதற்கு வேறு புலத்து ஆவென்றார்' என்று விளக்குவார் உரையாசிரியர். தொடர்ந்து,

நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பின் இம்மென இமிரும்
மாதர் வண்டொடு சுரும்பு நயந்திறுத்த
தாது அவிழ் அலரித் தாசினை பிளந்து
தாறுஅடு களிற்றின் வீறு பெற ஓச்சி
(146-150)

எனும் அடிகளுக்கு, "பாலையாழை வாசிக்க வல்லவன் தன் கையாலே வாசித்த நரம்புபோலே இம்மென்னும் ஓசைபட ஒலிக்கும் வண்டினத்தோடு தன்னிடத்து மணத்தை விரும்பித் தங்கின அரும்பினங்களை, பூக்களை உடைய ஒரு கொம்பை முறித்துத் தன்னைச் செலுத்தும் குத்துக்கோலைக் கை கடந்த மதக்களிறு போல் தலைவன் வீறு பெற ஓட்டினான்" எனும் பொருளைச் சொல்லித் "தனக்குக் காவலாகிய பெருமையினையும் உரனையும் கைகடந்து வேட்கை மீதூர்ந்து நிற்றலான் தாறடு களிற்றை உவமம் கூறினார்; மதக் களிற்றிற்கு அங்ஙனம் ஓச்சி நிற்றல் இயல்பு" என்று உவமையின் பொருத்தம் கூறுவார். அடுத்து,

அரவு உறழ்அம்சிலை கொளீஇ நோய்மிக்கு
உரவுச்சின முன்பால் உடல்சினம் செருக்கி
(158,159)

எனும அடிகளில், 'சினம் கொண்ட பாம்பைப் போன்ற வில்' பேசப்படுகிறது. பாம்பு எவ்வாறு வில்லுக்கு உவமையாகும் என்பதைப்

'பாம்பு வடிவிற்கும் கொலைத் தொழிலுக்கும் உவமை' என்று தெரிவிப்பார். அடுத்து,

முத்தினும் அணியினும் பொன்னினும் அத்துணை
நேர் வருங்குரைய கலங்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக்கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொல் மருங்கு அறிஞர்
(13-18)

என்னும் வரிகளில் வரும் எதிர்மறை உவமை உரையாசிரியரின் கூற்றால் தெளிவாகிறது. "முத்தாலும் மணியாலும் பொன்னாலும் ஆகிய பூண் கெடுமாயின் பின்னும் வந்து கூடும்; அதுபோலன்றி, பண்புகளின் அமைதியும் மேம்பாடும் ஒழுக்கமும் பழையதன்மை கெட்டால் மாசினைப்போக்கிப் புகழை முன்புபோல் நிலைநாட்டல் ஐயர்க்கும் எளிய காரியமென்று அறிஞர் கூறார்" என்பது அவர்தரும் பொருள் விளக்கம்.

குறிஞ்சிப்பாட்டில் வரும் ஒவ்வொரு சொல்லின் இயல்பான பொருளையும் அது வைக்கப்பட்டுள்ள இடத்தினால் அது சுட்டும் பொருளையும் கணக்கிலெடுத்துக்கொண்டு, பாடற்குப் பொருள் வரைவார் நச்சினார்க்கினியர் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. 'என் தோழி மேனி விறல்' (2-3) எனும் தொடரை, 'விறல்மேனி என்தோழி' எனக்கொண்டு, 'பிறர் நிறத்தினை வென்ற வெற்றி யுடைய நிறத்தினையுடைய என்தோழி' என்பார். 'நறையும் விரையும் ஓச்சியும் (7) பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும் (5) பேணியும்' (6) எனும் தொடர்க்குத் 'தூபங்களும் சந்தனம் முதலியனவும் கொடுத்தும் பரவியும் வணங்கியும் கலந்த பூக்களைச் சிதறியும் வழிபட்டும்' என்று பொருள் கூறிப் 'பேணியும் என்னும் உம்மை சிறப்பு; ஏனைய எண்ணும்மை' என்று இலக்கணக்குறிப்பும் தருவார்.

'ஐயர்க்கும் எளிய என்னார்' என்னும் தொடரில், 'ஐயர்' என்ற சொல்லுக்குத் தெய்வ இருடிகள் என்று பொருள் உரைத்து 'ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் (தொல்.கற்பு.நூ.5) என்றாராகலின்

ஐயர் தேவராகார்" என்று தம் கருத்திற்கு அரண் செய்யும் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுவார். 'இருவேம் ஆய்ந்த மன்றல்' (21) என்பதற்குத் தலைவனும் யானும் பெருமையும் உரனும் அச்சமும் நாணும் நுணுகிய நிலையாற் பிறந்த கந்தருவமணம்' என்று தொல்காப்பியக் களவியல் கூறும் "பெருமையும் உரனும் தலைவன் பண்புகள்; அச்சமும் நாணும் தலைவியின் பண்புகள்" எனும் கருத்தை உள்ளடக்கிப் பொருள் கூறுவார். நிறைவாக,

மானமர் நோக்கம் கலங்கிக் கையற்று
ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்
(25-26)

எனும் அடிகளுக்கு அவர், "ஆற்றும் தன்மைத்தல்லாத நோயினை உடையளாய் மான் நோக்கம் அமர்ந்த நோக்கமின்றி மையல்நோக்கம் கொண்டு வினையொழிந்து அயர்ந்து இவளும் தேம்பும்" என்று பொருள் உரைத்தல் சிறப்புடையதாகும். 'எமியேம் துணிந்த ஏமம் சால் அருவினை' என்ற அடியில் (32) 'தமியேமாய் யாங்களே துணிந்த கந்தருவ மணம்' என்று தோழி தன்னையும் சேர்த்துச் சொல்லுதற்குக் காரணம் அவளும் அவர்களின் புணர்ச்சிக்குப் பின் உடம்படுதலினால்தான் என்று சுட்டிக் காட்டுவார்.

'சேணோன் இழைத்த புலி அஞ்சு இதணம்' (40-41) எனும் தொடரின் விளக்கத்தோடு, 'சேணோன் மாட்டிய நறும்புகை நெகிழி' எனும் குறுந்தொகை அடியும் (150) ஒப்புமைப்பகுதியாக இடம்பெறும். தழல், தட்டை, குளிர் ஆகியவைகளுள் 'தழலாவது கையாற்சுட்டின காலத்துத் தன்னிடம் பிறக்கும் ஓசையால் கிளி முதலியவற்றை ஓட்டும் கருவி' என்றும், 'தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்குக்கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி' என்றும், 'குளிராவது இவை போல்வதோர் கிளி கடி கருவி' என்றும் விளக்கம் பெறும். நாணம் என்பதற்குக் 'காமக்குறிப்பு நிகழ்ந்த வழிப்படுவதோர் உள்ள வொடுக்கம்' என்றும் 'துச்சம்' என்பதற்கு 'அன்பு காரணத்தில் தோன்றிய உட்கு' என்றும் வேறொரிடத்தில் நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் இப்பாடலில் வரும் அச்சொற்கட்குப் பொருந்தும். தலைவியும் தோழியும்

விளையாடிய அருவி, 'தலைவனுடைய நெடிய மலைச்சிகரத்தினின்றும் குதிக்கின்ற அருவி என்று தோழி சொல்லும்போது அண்ணல், மலையிலிருந்து வரும் அருவியென்றதால் அவர்களுக்கு நிலம் ஒன்றென்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறாள் என்று எடுத்துரைப்பார். மலர்ப்பட்டியல், 'செங்காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை என்று தொடங்கிக் குருந்தும் வேங்கையும் பிறவும்' என்று முடிவதால், "செங்காந்தள் (62) முதலியவற்றிற்கெல்லாம் இரண்டாம் உருபும் உம்மையும் விரிக்க, குருந்தும் வேங்கையும் பிறவும் (95) என்ற மூன்றற்கும் உருபு விரிக்க" என்றும் இலக்கண விளக்கம் தருவார். 'வண்ணம் வண்ணத்த மலர்' (114) எனும் தொடருக்கு, "பல நிறங்களை உடைய மலர், பல சாதிகளையுடைய மலர், என ஒன்று நிறமும், ஒன்று சாதி வேறுபாடும் கூறினார்" எனும் விளக்கம் பலர் அறிந்திருக்கமுடியாத ஒன்றாகும். 'வழுவின் வழாஅ விழுமம்' (260) எனும் தொடருக்குத் 'தப்பும் செயலில் தப்பாத இடும்பை தருவன' என்று பொருள்கூறி, 'விழுமம்' எனும் சொல் விழுமம் தருவனவற்றைக் குறிப்பதால் ஆகுபெயராயிற்று என்று இலக்கணம் கூறுவார்.

கவிதை, தலைவி - தலைவனின் நிலையை நினைக்குந்தோறும் கண்ணீர் வடித்துக் கலங்கும் என்று முடிவதால், நச்சினார்க்கினியர், 'இவ்வாறு இந்த நல்ல நிகழ்ச்சி நடைபெற்றது என்று தோழி கூறிமுடித்தாள்' எனும் பொருள்பட, 'இது காண் நல்வினை நிகழ்ந்த வண்ணம் என்றாள் என வினை முடிக்க' என முடித்துக் காட்டலும் நாம் அறிய வேண்டிய ஒன்று.

நச்சினார்க்கினியரின் உரை, சுருக்கம், தெளிவு காரணமாகப் பெறும் அழகு முருகியல் இன்பத்தை மிகுவிக்கும் படைப்பிலக்கியத் தகுதியைப் பெற்றுள்ளது என்பதற்குக் **குறிஞ்சிப்பாட்டு** விளக்கமும் நல்ல சான்றாகும்.

மேற்கோள் நூல்

- பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், பதி. உ.வே.சா. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம், நிழற்படப் பதிப்பு, 1986.

குறள் போற்றும் பொருள் நெறி

பேரா. முனைவர் கி. கருணாகரன்
மேனாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைகழம், தஞ்சாவூர்.
அலைபேசி : 95669 63807

ஆய்வுச்சாரம்

திருக்குறள் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள சில முக்கியமான பொருள்நிலைப் பண்பாட்டுக் கோட்பாடுகளின் சிறப்புத்தன்மையை வெளிக்கொணர்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். இவ்வதிகாரத்தில் காணப்படும் எழுநூறு குறட்பாக்கள் பல்வேறு சமுதாய, பண்பாட்டு, பொருளாதார, கல்வி மற்றும் அரசியல் சார் வாழ்வியல் நிலைக்களங்களின் வாயிலாகக் குடிமக்களும் அரசும் செங்கோன்மையைக் கையாண்டு, நாட்டையும் மக்களையும் பொறுப்போடு பாதுகாத்தல் வேண்டும் என்பதைத் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றன. இவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ள அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்ற மூன்று உட்பிரிவுகள் மேற்குறிப்பிட்ட பல்வேறு நிலைகளைத் தெளிவுபடுத்துகின்றன. மேலும், சமுதாயத்தின் வளமான வாழ்க்கைக்குப் பெரிதும் தேவைப்படும் நிலைகளையே இந்த எழுநூறு குறட்பாக்கள் விளக்குவதோடு தமிழ்ச்சமுதாயத்தில் அன்றைய நிலையில் அமைந்திருந்த யதார்த்த வாழ்வியல் முறைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த, யதார்த்த உண்மை நிலை விளக்கம் உலக சமுதாயத்தின் பொருள்சார் வாழ்வியலை விளக்குவதற்கு இன்றைய நிலையிலும் ஏற்புடையதாக அமைந்துள்ளது.

கருச்சொற்கள் : பொருள்நிலைப் பண்பாடு, நாடு – வீடு – மேலாண்மை – அரசு, பொருள்செயல் வகை, இயற்றல் - ஈட்டல் - காத்தல் - காத்த வகுத்தல், அரச மேலாண்மை

அறிமுகம் : நாடு – வீடு – மேலாண்மை – அரசு

தொடக்க காலம் முதல் மக்கள் தம் வாழ்க்கைக்கு உணவு, உடை, உறையுள் மூன்றுமே அடிப்படைத் தேவைகளாக இருந்து வருவதையும் இவற்றைப் பெறுவதில் மக்களது உழைப்பும்

செயற்பாடும் பல்துறைப் பணிகளில் அவர்களது செயற்பாடும் செம்மையாக அமைய வேண்டியது அவசியமானது என்பதையும் காணமுடிகிறது. என்றாலும் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதில் கூட இன்று சிக்கல்கள் எழுந்து வருகின்றன. அதே நேரத்தில் இம்மூன்றோடும் தொடர்புடைய தொழில், கல்வி, பொருளாதாரம், வணிகம், தகவல் தொடர்பு போன்ற பிற துறைகளின் தேவையும் வளர்ச்சியும் பங்கும் நாளும் பெருகி வருவது கண்கூடு. இன்றைய நிலையிலும் வீடில்லாத – பசியாறத் தேவையான உணவில்லாத – மாற்றுத் துணியில்லாத மக்களது வாழ்க்கையையும் ஒரு புறம் பார்க்க முடிகிறது. அடிமைத்தனம், சர்வாதிகாரம் போன்றவை பெருமளவில் ஒழிக்கப்பட்டு ஆங்காங்கே உலக நாடுகள் விடுதலை பெற்றவையாக – குடியரசு கொண்டவையாக - இயங்கி வருகின்றன. இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ளதோடு அதன் இருபதாம் ஆண்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மக்கள் தாங்கள் வாழும் நாடுகளில் பல்வேறு திட்டங்கள் - செயற்பாடுகள் - வாயிலாகப் பயன் பெற்று வாழத் தொடங்கியுள்ளனர் என்றாலும் இதில் எந்த அளவிற்கு மனித சமுதாயம் பயனடைந்துள்ளது என்பது ஆழ்ந்து எண்ணிப் பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் - பொருளாதாரத்தில் (மிகவும்) பின்தங்கிய நிலையில் - வேலையில்லாத் திண்டாட்டத்தில் - தெருவிலும் பொது இடங்களிலும் கிடைத்ததை உண்டு – உறங்கிய நிலையில் - உடுத்திக் கொள்ள ஓரளவிற்கேனும் சரியான உடுப்புகள் ஏதும் இல்லாமல் அன்றாடம் முப்பதுக்கு மேற்பட்ட விழுக்காட்டினர் வாழ்ந்து வருகிறார்கள் என்பது நம் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பதோடு இவற்றையெல்லாம் போக்குவதற்கு நாடும் அரசும் எப்படியெல்லாம் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறது; கவலை கொள்ளச் செய்கிறது. (கருணாகரன், 2014)

குறள் நெறிகள் : உயர்வுள்ளலும் அதனடிப்படையிலான செயற்பாடும்

குறளாரின் கூற்றுப்படி உயர்வுள்ளலாக அமைந்து அதன் வழியில் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதன் இன்றியமையாமையை இச்சூழலில் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. நாடும் வீடும் மனிதனின் அடையாளங்கள். இந்த அடையாளங்கள் ஆட்டம் காணலாமா? ஆடிப்போகலாமா?

நாடும் வீடும் நமது அடையாளங்கள் - அடிப்படைத் தேவைகள் - அன்றாடப் பயன்பாட்டுத் தலங்கள். எனவே, இவை பேணப்பட வேண்டியவை; முறையாகப் பராமரிக்கப்பட வேண்டியவை. அதனால்தான் அன்று தொடங்கி இன்று வரை நாடும் வீடும் ஆளப்படுகிறது; ஆட்சிக்கு உட்படுத்தப்படுகிறது; மன்னராட்சி – மக்களாட்சி – மனையாட்சி என்றழைக்கப்படுகிறது. இவற்றின் மூலம் மேலாண்மைக்கும் ஆளாகிறது.

திருக்குறள் ஓர் சமூக அற நூல் - அற இலக்கியம். இதில் எழுநூறு குறட்பாக்கள் பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ளவை. இன்றைய பொருள் நிலைப்பண்பாடு (Material Culture) மிகத்தெளிவாக – நிறைவாக – ஆற்றல் மிக்க வகையில் இவ்வதிகாரத்தில் இடம்பெற்றிருப்பது உற்று நோக்கத்தக்கது; உயர் சிந்தனைக்குரியது. (Chendrayan, 2010)

ஆய்வு முன்னோடிகள்

திருக்குறளில் பொருள் நிலைப் பண்பாடு (Material Culture) குறித்த ஆய்வுகள் நேரடியாகப் பொருள்நிலைப் பண்பாடு குறித்த ஆய்வு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி இதுவரை விரிவாகவோ, ஆழ்நிலையிலோ மேற்கொள்ளப்படவில்லை. எனினும், இத்தகைய அணுகுமுறையின் பயன்பாட்டிற்கு முன்னோடி ஆய்வுகளாகச் சிலவற்றைக் கருத முடியும். இவற்றில் ஒன்பது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வாய்வுகளை இப்பிரிவின் கீழ் முன்னோடி ஆய்வுகளாகக் கருத அவற்றின் நோக்கங்களும் பயன்படுத்தப்பட்டுள்ள தரவுகளும் காரணமாகின்றன. 1993-இல் தொடங்கிய இத்தகைய ஆய்வுகள் 2018 - வரை பல்வேறு நிலைகளில் - தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

1993 – 1994 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு நூலாக வெளியிடப்பட்ட ஆய்வு, ‘குறள் மொழியும் நெறியும்’ என்பது (கருணாகரன் மற்றும் ஜெயா, 1994). மொழிப் பயன்பாட்டிற்கு – அதன் வழியாகச் சமுதாயத்தின் வாழ்வியலை உற்றுநோக்குவதற்கு - கோட்பாடுகளின் அடிப்படையில் ஆய்வுக்குள்ளாக்கியுள்ளது சிறப்புக்குரியது.

இதனையடுத்து, சென்றாயன் (2010) மேற்கொண்ட ‘The First Laws in Economics and Indian Economic Thought – Thirukkural’ என்ற ஆய்வு திருக்குறளைப் பொருள்சார் கோட்பாட்டு விளக்கத்தின் அடிப்படையில் அணுகிய குறிப்பிடத்தக்க ஆயவாகும். பொருளதிகாரம்

குறிப்பிடும் முக்கியமான பொருள்சார் கொள்கைகளைப் பயன்படுத்திச் சில விளக்கங்களை இவ்வாய்வு முன் வைத்துள்ளது.

'Ancient yet Modern Management Concepts in Thirukkural' (Irai Anbu, 2012) எனும் நூலில் முன் வைக்கப்படும் மேலாண்மைக் கோட்பாடுகள் இன்றும் பல்வேறு நிலைகளில் முன்னிலைப்படுத்தப்பட்டு வருவதைக் குறிப்பிடுகிறது.

Krishnakumar (2014) என்பவர் அவருடைய 'Management Concepts from Thirukkural' என்ற ஆய்வில், பொருளதிகாரம் வரையறை செய்து வழங்கியுள்ள மேலாண்மைக் கோட்பாடுகளை முறையாக வகைப்படுத்தி, தெளிவான விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

'திருக்குறள் - ஒரு கோட்பாட்டுச் சங்கமம்' என்ற கட்டுரையில் கருணாகரன் (2014) பொருளதிகாரம் வெளிப்படுத்தும் நாடு – சமுதாயம் - பொருளாதாரம் - வாழ்வியல் - வளர்ச்சி போன்ற பலதுறைசார் கோட்பாடுகளை ஒருங்கிணைத்து விளக்க முற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எழுநூறு குறட்பாக்களின் வழி வெளிப்படும் பொருள்சார் - பொருள் நிலைப் பண்பாடுசார் - கொள்கைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன.

'Rediscovering Six Factor Entrepreneurial Decision Making Model in Thirukkural' என்ற ஆய்வுக்கட்டுரை (Jain, Alka 2012) பொருள் சார் வணிகம் மற்றும் தொழில் துறைகளில் மேற்கொள்ளப்படும் உறுதிப்பாட்டு முன்மாதிரிகளை வரையறை செய்ய முற்பட்டுள்ளது வரவேற்பிற்குரியது.

இதனைத் தொடர்ந்து 'Thiruvalluvar and the Art of Management' என்ற ஆய்வுக்கட்டுரையில் நாகநாதன் (2015), திருக்குறள் குறிப்பிட்டுள்ள மேலாண்மைக் கலையினைத் (Management Art) தெளிவாகவும் செறிவாகவும் விளக்கியுள்ளார்.

இதனையடுத்து, 'Voice of Valluvar – Thirukkural' (The Tamil Veda) என்ற நூலில் ஆங்காங்கே திருக்குறள் வெளிப்படுத்தும் பல்வேறு கோட்பாடுகளை மிகத் தெளிவான பொருள்சார் மற்றும் வாழ்வியல் நெறிசார் வரையறைக்கு உட்படுத்தி விளக்கங்கள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார் (Jyothirlatha (2015)).

பொருளாதாரம் மற்றும் மேலாண்மைக் கோட்பாடுகளுக்கும் நன்னெறி அமைப்பு முறைக்கும் மேலே குறிப்பிட்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கப் பங்கினைக் கொடுத்துள்ளது தெளிவாகிறது.

இவற்றையெல்லாம் உற்றுநோக்கிய நிலையில் இவ்வாய்வில் பொருள் நிலைப் பண்பாடு சார் கோட்பாடுகள் முதன்மைப்படுத்தப்பட்டு அரசியல் - அங்கவியல் - ஒழிபியல் பகுதிகளில் இடம்பெற்றுள்ள குறட்பாக்கள் பல்வேறு உட்பிரிவுகளின் கீழ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

ஆய்வு நெறிமுறைகள்

இவ்வாய்வு இரு சிறப்பு நோக்கங்களை எட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒன்று, நாடு சிறக்க – வீடு (மக்கள்) சிறக்க - என்னென்ன வேண்டும்; அவை எப்படியெல்லாம் அமைய வேண்டும் என்பது; மற்றொன்று இதற்குத் தேவையான பொருள் நிலைப் பண்பாட்டுக் கோட்பாடுகளை இனங்கண்டு ஏற்ற வழிமுறைகளை விளக்குதல். இவ்விரண்டு நோக்கங்களை அடைவதற்கு – அதற்கான ஆய்வை மேற்கொள்வதற்குச் சில தகவல்கள் - கருத்துகள் - உற்றுநோக்கல் வழியாகப் பெற்ற குறிப்புகள் போன்றவை தேவைப்படுகின்றன. இவற்றையெல்லாம் மையப்படுத்தி நன்கு வரையறை செய்யப்பட்ட ஆய்வுநெறி முறைகளைப் பயன்படுத்தி இங்கே பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேவைப்படும் தகவல்கள் - செய்திகள் - கருத்துகள் உற்றுநோக்கலின் வழியாகப் பெற்ற கருத்துகள்

1. நாடு – அரசு – அமைச்சு குறித்த கருத்துகள்.
2. நிருவாகம் - மக்களது தேவைகள் - இதற்கான பணிகள் பின்பற்றப்பட வேண்டிய முறைகள்.
3. படை – குடி - கூழ் - அமைச்சு – நட்பு – அரண் குறித்த கோட்பாடுகள்.
4. இயற்றல் - ஈட்டல் - காத்தல் - காத்த வகுத்தல் முறைகள்.
5. பொருள் செயல் வகை – நட்பு – அரண் - படையாட்சி குறித்த செய்திகள் போன்ற பல.

1.ஆய்வு நெறிமுறை – அணுகுமுறை

- சமுதாய வளர்ச்சி – அதற்கானத் திட்டமிடல் கோட்பாடுகள்
- பொருளாதார வளர்ச்சி – அதற்கானத் திட்டமிடல்
- நாடும் சமுதாயமும் – வாழ – வளர : அரசின் செயல்பாடு

மேலாண்மைக்கான கருவும் திருவும்

பொருளதிகாரத்தின் முதற்குறளே மேலாண்மைக்கான பொருள்சார் கோட்பாட்டின் கருவாகவும் திருவாகவும் அமைந்துள்ளது எண்ணற்பாலது. (Muniappan, 2001, Naganathan, 2016).

> **படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்**
> **உடையான் அரசருள் ஏறு (381)**

ஒரு நாட்டு மேலாண்மையின் உச்சம் அரசன். அப்படிப்பட்ட அரசன் ஏறாகக் கருதப்பட ஆறு துறைகளில் செல்வந்தனாக விளங்க வேண்டும். இவ்வுடைமைகள் இன்றைய வல்லரசு நாடுகளில் கூடக் காணப்படவில்லையே! ஏனெனில்,

வல்லரசாகக் கருதப்படும் நாடுகளில் கூட தேவையான அரணில்லை.

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் 15-35 விழுக்காட்டு மக்கள் தொகையினைக் கொண்டு அல்லலுறும் நாடுகள் - சமுதாயப் பிரிவினர்.

வலுவான – பகையில்லாத – நட்பு நாடுகள் பெறாத நாடுகள்.

வலுவில்லா – ஆற்றல் குறைந்த அரசு / அமைச்சினைப் பெற்று விளங்கும் நாடுகள்

என அமைப்பிலும் உடைமையிலும் தன்னிறைவற்ற நாடுகள் காணப்படுகின்றனவே? மேலாண்மை என்னவாயிற்று? நாட்டு வளர்ச்சி என்னவாயிற்று? உயர் சிந்தனை தேவை.

ஒரு நாட்டில் அரசின் செயற்பாடு

அரசுக்கு நான்கு பெரும் பணிகள்: இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல். இவை ஒன்றோடொன்று ஒருங்கிணைந்து இயங்குபவை; ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை.

இயற்றல், ஈட்டல் ஓரளவுக்கு முறைப்படுத்தப்பட்ட நிலையிலும் கூட 'காத்தலும் காத்த வகுத்தலும்' வறுமைக்கும், பொருளாதாரப் பின்னடைவு – வீழ்ச்சி - போன்றவற்றிற்கு வழிவகுப்பதாகவும் உள்ளதைக் காண முடிகிறது. பொதுவுடைமைக் கொள்கை கூட வழிவகுக்காதது ஏன்? என்ற வினாவிற்குச் சரியான விடை இன்று வரை கிடைக்கவில்லை. இந்நிலையில் செயற்பாடுகளிலும் பின்பற்றப்பட்டு வரும் மேலாண்மையின் நிலை என்ன? என்ற கேள்வி எழுகிறதல்லவா! (Krishnakumar, 2014).

முறை செய்து காத்தல் - குடி ஓம்பல் - தூங்காமை

1. தளர்ந்த குடிமக்களைக் காத்தல் (Protecting the downtrodden communities).
2. தூங்காமைப்பண்பு (Not practising delaying techniques or tactics).
3. முறைசெய்து காத்தல் (Following the laws, Legal Methods, Social norms in protecting the needs – safeguard measures needed for the society).
4. குடிமக்களது குறைகளுக்குச் செவிமடுத்துக் கேட்டுப் பணியாற்றும் பண்பும் செயற்பாடும் அமைதல்.
5. அரசமைப்பில் இடம்பெறுவோரை எதிரிகளாக எண்ணி இன்னாத கூறாமை.

இவையெல்லாம் இன்று எப்படி அமைந்து வருகின்றன? குறிப்பாக, தளர்ந்த மூத்த குடிமக்கள் படும் அல்லல் நீடிக்கும் நிலை ஒருபுறம்; காலந்தாழ்த்திய செயற்பாடு – நீதி – நெறிமுறை பிறழ்ந்த செயற்பாடு மற்றும் எதிரிகளுக்கும் ஒவ்வாத இன்னாத சொற் பயன்பாட்டின் பயன்பாடு போன்றவை மற்றொருபுறம்; குடியரசுக் கொள்கையினையே அதிர வைக்கிறதே – மேலாண்மை எங்கே மறைந்து விட்டது?

குடியரசுகளின் தலைமையும் மேலாண்மையும் ஆழ்ந்து எண்ணிச் செயல்பட வேண்டிய காலச்சூழலைக் காண்கிறோம்.

உறுபசி – ஓவாப்பிணி - செறுபகை

ஒரு நாட்டின் மேலாண்மையை மதிப்பீடு செய்ய இம்மூன்றும் ஏற்ற அளவுகோல்களே. இவற்றைப் போக்குவதற்கு அரச மேலாண்மையே (Political Management) பெரிதும் வழிவகுக்கும். உறு – ஓவா – செறு – என்ற அடைகள் முறையே extreme too much, unbearable போன்ற பொருளைத் தருவன. அது மட்டுமின்றி, உரிய நேரத்தில் - சரியான முறையில் - காலந்தாழ்த்தாது செயற்பாடுகள் அமைய நாட்டின் மேலாண்மை உதவ வேண்டும் - செயற்பட வேண்டும் என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது. இதனை முன்வைத்தே இக்குறள் அமைந்துள்ளது.

வாய்ந்த மலை – வருபுனல் - வல்லரண்

'காடு மலை என்ற போதும் நம் நாடு' என்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார் கவிஞர் கண்ணதாசன். மலை வளம் - நீர் வளம் - நாட்டின் பாதுகாப்பிற்குச் சிறப்பிடம் வழங்கியுள்ளார் திருவள்ளுவர் (குறள் - 737). இத்தகைய வளங்களையும் அரணையும் பாதுகாப்பதும் பெற்று விளங்குவதும் சிறப்பிற்கு உரியன அல்லவா? இப்பணிகளுக்கான மேலாண்மை எந்த அளவிற்குத் தேவையானது என்பதை நீர்வளம் சில பகுதிகளில் குறைந்துள்ள இன்று நாம் கவலையோடு உணர்கிறோம். இதனடிப்படையில் வளர்ச்சிப் பணிகளின் (Border Security) இன்றியமையாத தேவையையும் உணர்கிறோம். இவற்றைச் செம்மைப்படுத்தத் தேவையான மேலாண்மைப் பணிகளை மட்டுமல்லாது, அனைத்துப் படிம நிலைகளிலும் (ஒருங்கிணைந்த நிலையில்) செய்ய வேண்டிய பாதுகாப்புப் பணிகளை வேகமாக முடுக்கி விடுகிறோம். இவையெல்லாம் நாட்டின் பாதுகாப்புக்கான உடனடித் தேவைகள் - அரும்பணிகள் - காலத்தினாற் மேற்கொள்ள வேண்டிய காப்புப் பணிகள் என்பதில் ஐயமில்லை.

வேந்து அமைவில்லாத நாடு

ஒன்பது குறட்பாக்களில் நாடு என்ற கோட்பாட்டினை விளக்கிய வள்ளுவப் பெருந்தகை அவ்வதிகாரத்தின் பத்தாவது குறளில் குறிப்பிட்டுள்ளது உற்று எண்ணத்தக்கது.

'.... வேந்துஅமை வில்லாத நாடு' (குறள் - 740). நல்ல அரசன் அமையாத நாடு எவ்வாறு பயனற்றுப் போகும் என்பதை இக்குறள் வழி எடுத்துக்காட்டியுள்ளார். இத்தகையச் சூழ்நிலை ஏற்படுவதற்கும் மேலாண்மையில் ஏற்படும் குறையே காரணமாகிறது. இதுவும் காப்பாளர்களின் உயர்சிந்தனைக்குரியது.

செங்கோன்மை – கொடுங்கோன்மை

குறள், செங்கோன்மை – கொடுங்கோன்மையை எடுத்துக்காட்டியுள்ளது. எப்படி? நாட்டைக் காக்கும் அரசன் முறைப்படி காக்காவிட்டால், அந்நாட்டில் வளர்க்கப்படும் பசுக்கள் பால் தரும் பயன் கூட குன்றிவிடும் என்பார். அப்படியெனில், மக்கள் பாதிப்புக்கு உள்ளாவதோடு மட்டுமன்றிப் பால் தரும் பசு கூடப் பயனற்றுப் போகும் என்பதை உணர முடிகிறது. எது செங்கோன்மை என்பதை விளக்கும் நிலையில் மன்னவன் மக்களை வருத்தாமல் காப்பாற்றுவதோடு, அவர்களது குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் வேண்டும். அது மன்னனது தொழில்; பழி அன்று என்பார் வள்ளுவர். இன்னும் ஒரு படி மேலே போய், கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் என்பது விளையும் பயிரைக் காப்பாற்றுவதற்காகக் களையை எடுப்பதற்கு நிகரான செயலே என்பார்(குறள் 549-550). இவையும் மன்னனின் மேலாண்மைச் செயல்களே – ஆணைகளே. அதே போன்று கொடுங்கோன்மை அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஒரு குறளில் 'அரசன் முறை தவறித் தன் நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவ மழை தவறி, மேகம் மழை பெய்யாமல் போகும் என்று சாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவையும் மேலாண்மைக்கு உட்பட்டவையே.

பெரியோர் - ஆன்றோர் - சான்றோர் துணைக்கோடல்

கடிந்து, தக்க அறிவுரை வழங்கும் பெரியாரின் துணைக்கொண்டு நடப்பவரைக் கெடுக்கும் ஆற்றல் யாருக்கு உண்டு? என்று வினவும் வள்ளுவர், இன்னொன்றையும் குறிப்பிடத்தவறவில்லை.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் (448)

இன்றைய மேலாண்மையில் உயர் ஆலோசனைக்குழு (top advisory committee) போன்று ஆட்சிக்குழு, ஆலோசனைக்குழு, செயற்குழு, மேல்மட்ட நிருவாகக்குழு போன்றவற்றை அமைத்துச் செயல்படுத்தப்படுவதைக் காண்கிறோம். துறைசாரா ஆற்றல் என்பது

எல்லாருக்கும் அமைவதில்லை. அதனால் தேவைக்கேற்ப துறைசாரா வல்லுநர்கள், பயிற்சியாளர்கள், இயக்குநர்கள் ஆகியோரது பங்கும் பணியும் தேவை என்பதும் சூழலுக்கேற்றவாறு பயன்படுத்தப்பட வேண்டியது என்பதும் வலியுறுத்தப்படுகிறது. இது போன்ற பங்கும் பணியும் மேலாண்மை சார்ந்ததே.

பொருள் வளம் - பொருள் இயற்றல் மேலாண்மை

நாடும் வீடும் வாழ – வளம் பெற, பொருள் வளம் பொருள் இயற்றல் (ஈட்டல்) இவற்றின் பங்கு மிகவும் தேவையானது. பொருள் சார் பண்பாட்டு வளர்ச்சிக்கும் இது மிகவும் அவசியமாகிறது. எனவேதான், பொருள் பண்பாட்டிற்குச் சிறப்பிடம் கொடுத்து, எழுநூறு குறட்பாக்களை யாத்துள்ளார் திருவள்ளுவர் என்பது புலனாகிறது.

நாடு என்னும் சொல்லுக்கு விளக்கம் தரும் நிலையில் ‘நாடு என்ப நாடா வளத்தன’ (739) என்பார். இறைமாட்சி எனும் அதிகாரத்தில் ‘இயற்றலும் ஈட்டலும்’ (385) என்று குறிப்பிடும் வள்ளுவர்,

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எ·.குஅதனின் கூரியது இல் (759)

என்பதன் வழி, ‘ஒருவன் பொருளை ஈட்ட வேண்டும்; அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்கவல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை’ என்று வரையறை செய்கிறார்.

பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள் (751)

எனும் குறளில் பொருளின் தனித்தன்மையை விவரித்து, அதனை நல்வழிகளில் ஈட்டுவதன் மூலம் அறமும் இன்பமும் பெற முடியும் என்று குறிப்பிடுகிறார்.

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் (756)

இயற்கையாக வந்து சேரும் பொருள் + சுங்கமாக வந்து சேரும் பொருள் + பகைவரை வென்று திறமையாகக் கொள்ளும் பொருள் இவையனைத்தும் அரசனது பொருள் (Government Treasury) என்று குறிப்பிட்டு நாட்டுப் பணிகளுக்காக வேந்தனைச் சேர வேண்டிய பொருள் என்பதைச் சுட்டிக்காட்டி, பொருளாதார மேலாண்மைப் பணிகளை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். வேந்தன்,

அரசுப் பணிகளுக்காக – மக்கட் பணிகளுக்காகச் செலவிடும் பணம் பலவகைகளிலும் வந்து சேர்வது. இதனைப் பெற்று நாட்டுப் பணிகளுக்குச் செலவிட ஏற்ற மேலாண்மை தேவை. இதைத்தான் நாடுகள் ஆண்டுதோறும் மேற்கொள்கின்றன. மூன்று முதல் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திட்டப் பணிகளை மேற்கொள்கின்றன. குறுகிய கால, நீண்ட கால வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்கின்றன. (Short Term and Long Term Projects and Plans). இப்படி மேற்கொள்ளப்படும் திட்டங்களே ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கும் உரமூட்டுகின்றன.

படைமாட்சி

ஓர் அரசனுடைய வெற்றிப்படை ஒரு நாட்டின் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்த செல்வமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர். படைமாட்சி எனும் அதிகாரம் படையின் தேவை, தலைமை, வலிமை, அஞ்சாமை, ஆற்றல் போன்றவற்றை உள்ளடக்கியது. ‘தம்பியுடையான் படைக்கு அஞ்சான்’ என்பது முதுமொழி – கவிமொழி. படைமாட்சிக்குப் பொருத்தமான அணுகுமுறையும் தேவை; மேலாண்மையும் தேவை. அவசரமும் அவசியமும் கலந்த மேலாண்மையே மிகுந்த பலன் தரும் என்பதால் போற்றிப் பேணப்பட வேண்டிய ஒன்று; இதனால்தான் இறைமாட்சிக்கு நிகராகப் படைமாட்சியை விளக்கியுள்ளார் என்பது தெளிவாகிறது.

முடிவுரை

திருக்குறள் ஓர் அறநூல் என்றாலும் பொருளதிகாரம் மையப்படுத்தியுள்ள கோட்பாடுகள் பொருள்நிலைப் பண்பாடு சார்ந்தவையாகவே அமைந்துள்ளன; நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் பொருள்சார் வாழ்க்கை தொடங்கி அரசு, ஆட்சி, மேலாண்மை, கல்வி, நட்பு, அரண், படை, குடி, கூழ், அறிவு, ஆற்றல், ஆள்வினை உடைமை, பகை எனப் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது. பாரெங்கும் நாம் அன்றாடம் காண்பது; உற்று நோக்கி உயர் சிந்தனைக்கு உள்ளாக்குவது. எனவே, பொருளதிகாரம் நாட்டு நடப்பிற்கும் அன்றாட வாழ்வியலுக்கும் வழி காண்பது; அதனால்தான் இதன் வாயிலாக வெளிப்படும் கோட்பாடுகள் மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் வழிவகுக்கும் என்பதால் அவற்றைப் போற்றிப் பின்பற்றி வாழ முனைகிறோம். இது போன்ற கருத்துகள் இன்னும் நன்முறையில் பரவலாக்கம் பெற வேண்டும். அதற்கு இது போன்ற ஆய்வுகள் துணை நிற்கும்.

சங்கச் செய்திகள்

05.03.2020 அன்று காலை 10.30மணியளவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தமிழ்ப் பண்பாட்டு மையமும், மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் - செந்தமிழ்க் கல்லூரி, தமிழ் உயராய்வு மையமும், சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும் இணைந்து நடத்திய, **'காலந்தோறும் தமிழ்ப்பண்பாடு'** என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழின் முதன்மை ஆசிரியர் முனைவர் ந.முருகேசபாண்டியன் அறிமுகவுரையாற்றினார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் இயக்குநர் முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை தொடக்கவுரையாற்றினார். சிங்கப்பூர், சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தின் மேனாள் விரிவுரையாளர் முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி, இலங்கை, பதுளை ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன், திருச்சி உருமு தனலெட்சுமி கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ந.விஜயசுந்தரி ஆகியோர் சிறப்புரையாற்றினர். பிற்பகலில் நடைபெற்ற நிறைவுவிழாவில் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி தலைமை தாங்கினார். சான்லாக்ஸின் பதிப்பாசிரியர் சு.லட்சுமணன் முன்னிலை வகித்தார். காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் மா.சிதம்பரம் சிறப்புரையாற்றினார். கருத்தரங்கில் பங்கேற்ற தமிழகத்தின் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த நூற்று ஐம்பத்தேழு பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்(பொ.), துணைமுதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் திரளாகக் கலந்துகொண்டனர். உதவிப் பேராசிரியர்கள் முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் ஜெ.கோகிலா ஆகியோர் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.

06.03.2020 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் கல்லூரி மகளிர் மையத்தின் சார்பாக '**உலக மகளிர் தினம்**' கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா தலைமை தாங்கினார். தூத்துக்குடி ஏ.பி.சி.மகாலெட்சுமி கல்லூரி, தமிழ்த்துறை மேனாள் பேராசிரியர் முனைவர் உ.அனார்கலி, 'உன்னால் முடியும் பெண்ணே' என்ற பொருளிளல் சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவியர் இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தினர். கல்லூரி மகளிர் மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜெ.போ.சாந்திதேவி வரவேற்புரையும் முதுகலை முதலாமாண்டு மாணவி க.ஆர்த்தி நன்றியுரையும் நல்கினர். நிகழ்ச்சியில் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவியர் திரளாகக் கலந்துகொண்டனர்.

கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக ஏழு நாள்கள் சிறப்பு முகாம் கொடிமங்கலம், கொடிமங்கலம் புதூர், தாராபட்டி ஆகிய கிராமங்களில் 09.03.2020 முதல் 15.03.2020 வரை நடைபெற்றது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி முகாமைத் தொடங்கிவைத்தார். நாள்தோறும் பகலில் சமூகப் பணிகளும் மாலையில் விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் சிறப்பு முகாமினை ஒருங்கிணைத்தனர்.

10.03.2020 அன்று ஆஸ்திரேலியா குயின்ஸ்லாந்து தமிழ்மன்றத்தின் தலைவர் வாசுகி சித்திரசேனன் அயலகத்தமிழின் நிலைகுறித்து '**ஆஸ்திரேலியாவில் தமிழ்**' என்ற பொருளிளல் கருத்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

மே திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

ந.சுப்பு ரெட்டியார்
(மே.1)

க.த.திருநாவுக்கரசு
(மே.5)

மயிலை சீனி வேங்கடசாமி
(மே.8)

த.வே.உமாமகேசுவரன் பிள்ளை
(மே.9)

பி.எஸ்.ராமையா
(மே.18)

கா.அப்பாத்துரை
(மே.26)

மா.இராசமாணிக்கனார்
(மே.26)

ஜெகசிற்பியன்
(மே.26)

ஆ.பூவராகம் பிள்ளை
(மே.28)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் ம.திருமலை
முனைவர் அ.தட்சிணாமூர்த்தி
முனைவர் இ.மறைமலை
முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்
முனைவர் செ.கந்தசாமி
முனைவர் மு.மணிவேல்
முனைவர் பெ.சுயம்பு
முனைவர் இ.கி.ராமசாமி
முனைவர் உ.கருப்பத்தேவன்
முனைவர் உல.பாலசுப்பிரமணியன்
முனைவர் அ.நந்தினி
முனைவர் ச.கவிதா

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு,
மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1